**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 212 of 2024

DATE : 08.07.2025

Depositions of witness for Prosecution

PW : 4

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரமோகன் | Caste | |
| Father/Husband's Name | ஆண்டியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 8th day of July 2025

**(2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : -**

1) நான் தற்போது மதுரையில் வசித்து வருகிறேன். கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 12.12.2012ம் தேதி சிவகங்கை மாவட்டம் பூவந்தி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது பூவந்தி காவல் நிலைய காவலர் என்னையும் கிராம உதவியாளர் முத்துச்சாமி என்பவரையும் வழக்கு விசாரணைக்காக வரச்சொன்னார்கள். சோதனை சாவடி அருகே பூவந்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வாகன தணிக்கையில் ஈடுபட்டியிருந்த போது டாடா ஏஸ் வாகனத்தை தணிக்கை செய்து கொண்டிருந்தார். பிரபு என்பவர் மற்றும் மூன்று நபர்கள் எங்கள் முன்னிலையில் விசாரித்து கொண்டிருந்தார்கள். விருதுநகர் மாவட்ட வத்திராயிருப்பு அருகே 11.12.2012ம் தேதி ஆடு திருடியதாக எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த இடத்தில் வைத்து டாடா ஏஸ் வாகனத்தையும் 8 ஆடுகளையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில் நானும் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து

என்னுடையது தான். **அத்தாட்சியில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : -**

1) பூவந்தி காவல் நிலையத்தில் இருந்து காலை 9.30 மணிக்கு தகவல் சொன்னார்கள். டாடா ஏஸ் வாகனத்தில் யாரோ திருடி வந்ததாகவும் சார்பு ஆய்வாளர் அது சம்மந்தமாக விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும் என்னை உடன் இருக்க வருமாறு அழைத்தார்கள். சோதனை சாவடிக்கும் எனது அலுவலகத்திதற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 250 மீட்டர் தூரம் இருக்கும். டாடா ஏஸ் வாகனத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. போலீசார்கள் என்னை விசாரித்தார்கள். எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் டிசம்பர் 12. வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் போலீசாருக்கு ஒத்துலைப்பு கொடுக்கவேண்டிய கட்டாயம் எங்களுக்குள்ளது. அத்தாட்சியில் எப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் 12ம் தேதி மாலையில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் சார்பு ஆய்வாளர் என்னை 14ம் தேதி விசாரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் 12ம் தேதி கையெழுத்து செய்ததாக குறிப்பிடப்படுள்ளது என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் நான் சொல்வது போல எதிரிகளை விசாரணை செய்திருந்தால் ஆவணங்களில் காணப்படும் தேதி முரண்பாடுகள் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். வழக்கின் எதிரிகளை சம்பவ இடத்தில் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : -**

3ம் எதிரி தரப்பில்செய்த குறுக்கு விசாரணையை 2, 4 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது-

**மறு விசாரணை : - இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு